புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(17-09-2016 – 21-09-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 16-09-2016

**கடந்த கால வானிலை 12-09-2016 முதல் 15-09-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35-37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26 |
| மேக மூட்டம் | 5-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 33-69 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி) | 11-18 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 21-09-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 17.09.16 | 18.09.16 | 19.09.16 | 20.09.16 | 21.09.16 |
|---|---|---|---|---|---|
| | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
| மழை (மி.மீ) | 0.5 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 34 | 34 | 34 | 34 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26 | 26 | 26 | 26 | 26 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 5 | 5 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 42 | 42 | 42 | 42 | 42 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி :**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவும், மழை இல்லை.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் கரும்பு**

**பருவம்: குறுவை: பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவம், சம்பா: விதைத்தல் மற்றும் நடவு**

- கடந்த சில நாட்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை தயார் செய்யவும்.
- காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும்.
- மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும்.
- மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.